**இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை: முனைவர்.ஜெ.யு.சந்திரகலா, இ.ஆ.ப.,**

ந.க.பஅ2/3514/2024 நாள்:09.05.2025

பொருள் : பணியமைப்பு – இராணிப்பேட்டை மாவட்டம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் – ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - தொகுதி-II – நேர்முக தேர்வு அல்லாத பணியிடங்களுக்கு (Non Interview Posts) தெரிவு செய்யப்பட்டு இராணிப்பேட்டை மாவட்ட ஊரக வளர்ச்சி அலகிற்கு நேரடி உதவியாளர்களாக ஒதுக்கீடு செய்து வரப்பெற்றது – பணி நியமனம் வழங்கி ஆணையிடப்பட்டது – பணியில் சேர்ந்த நாளில் பணி வரன்முறை செய்து ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை :
1. செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடிதம் எண்.1051/PSD-A2/2024, நாள்:28.06.2024 மற்றும் 20.08.2024
2. இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.பஅ2/3514/2024, நாள்:19.07.2024 மற்றும் 01.10.2024
3. இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர்(ஊ.வ) அவர்களின் செயல்முறைகள் ந.க.பஅ2/3514/2024, நாள்:19.02.2025
4. இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர்(ஊ.வ) அவர்களின் கடிதம் ந.க.பஅ2/3514/2024, நாள்:18.03.2025 மற்றும் 30.04.2025
5. சம்மந்தப்பட்ட அலுவலகங்களிடமிருந்து வரப்பெற்ற கருத்துருக்கள்
6. தொடர்புடைய ஆவணங்கள்.

* * * * *

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு தொகுதி-II(Combined Civil Service Examination-II) (Group-IIA Services) நேர்முக தேர்வு அல்லாத பணியிடங்களுக்கு (Non Interview Posts) நேரடி உதவியாளர்களாக தெரிவு செய்யப்பட்டு, பார்வை (1)-ல் காணும் கடிதத்தின்படி, இராணிப்பேட்டை மாவட்ட ஊரக வளர்ச்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 15 தெரிவாளர்களுக்கு பார்வை (2)-ல் காணும் செயல்முறைகளின்படி, உதவியாளர் நிலையில் பணி நியமனம் வழங்கி ஆணையிடப்பட்டதையடுத்து, மேற்படி மேற்படி 15 தெரிவாளர்களில் தமிழ்வழி பயின்றமைக்கான கல்வி சான்றிதழ் மெய்த்தன்மை விவரம் வரப்பெறாத காரணத்தினால் திரு.மு.அண்ணாமலை மற்றும் செல்வி.வ.தீபா ஆகிய பணியாளர்களையும், ஆதரவற்றோர் விதவைச் சான்றிதழின் மெய்த்தன்மை விவரம் வரப்பெறாத காரணத்தினால் திரு.மு.சரண்யா என்ற பணியாளரையும் தவிர்த்து பிற 12 பணியாளர்களுக்கு மட்டும் முதற்கட்டமாக பார்வை (3)-ல் காணும் செயல்முறைகளின்படி பணி வரன்முறை செய்து ஆணையிடப்பட்டது.

தற்போது மேற்படி 3 பணியாளர்களின் தமிழ்வழி பயின்றமைக்கான கல்வி சான்றிதழ்கள் மெய்த்தன்மை உடையது எனவும் ஆதரவற்றோர் விதவைச் சான்றிதழ் மெய்த்தன்மை உடையது எனவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்து அறிக்கை வரப்பெற்றுள்ளது.

திருப்புக...

அதன்படி, பின்வரும் அட்டவணையின் கலம் (3)-ல் குறிப்பிட்டுள்ள நாளில் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வரும் மேற்படி பணியாளர்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, கலம் (4)-ல் குறிப்பிட்டுள்ள நாளில் உதவியாளர் நிலையில் கீழ்காணும் நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

"The regularization is subject to the outcome of W.A.(MD)No.181 of 2023 & C.M.P(MD) No.2247 of 2023 pending before the Hon'ble Madurai Bench of the Madras and other cases if any pending on the files of the Hon'ble High Court of Madras / Madurai Bench of Madras High Court to this recruitment"

| வ.எண் | பணியாளர்கள் பெயர்/ பதவி/பணிபுரியும் அலுவலகம் (திருவாளர்கள்) | பணியில் சேர்ந்த நாள் | பணி வரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | **மு.அண்ணாமலை,**<br>உதவியாளர்,<br>வாலாஜா ஊராட்சி ஒன்றியம். | 26.07.2024<br>முற்பகல் | 26.07.2024<br>முற்பகல் |
| 2 | **மு.சரண்யா,**<br>உதவியாளர்<br>திமிரி ஊராட்சி ஒன்றியம். | 25.07.2024<br>முற்பகல் | 25.07.2024<br>முற்பகல் |
| 3 | **வ.தீபா,**<br>உதவியாளர்,<br>உதவி செயற்பொறியாளர் அலுவலகம், நெமிலி உபகோட்டம், இராணிப்பேட்டை. | 07.10.2024<br>முற்பகல் | 07.10.2024<br>முற்பகல் |

மேற்படி பணிவரன்முறை ஆணையினை சம்மந்தப்பட்ட பணியாளர்களுக்கு சார்வு செய்திட தொடர்புடைய அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பணிவரன்முறை செய்யப்பட்ட விவரம் சம்மந்தப்பட்ட பணியாளர்களின் பணிப்பதிவேட்டில் பதியப்பட்டது.

**மாவட்ட ஆட்சித்தலைவருக்காக**

09/05/2025

**பெறுதல்:**
சம்மந்தப்பட்ட பணியாளர்கள் - உரிய வழிமுறையாக

**நகல்:** வட்டார வளர்ச்சி அலுவலர்கள்(வ.ஊ/கி.ஊ), திமிரி/வாலாஜா.
**நகல்:** உதவி செயற்பொறியாளர், நெமிலி உபகோட்டம், இராணிப்பேட்டை.
**நகல்:** இணை இயக்குநர்/திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, இராணிப்பேட்டை.
**நகல்:** செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை - 600 003.
**நகல்:** ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை-15.
**நகல்:** "பஅ2" இருப்பு கோப்பு.